North West London Collaboration of Clinical Commissioning Groups

# பராமரிப்பை மேம்படுத்துவதற்கு உங்கள் தகவலை பகிர்ந்து கொள்ளுதல்

உங்களுக்கு சிறந்த பராமரிப்பை வழங்குவதற்காக நார்த் வெஸ்ட் லண்டன் சுகாதார மற்றும் பராமரிப்பு வல்லுநர்கள் ஒன்றாக இணைந்து பணியாற்றி வருகிறார்கள். இதில் ஈடுபட்டுள்ளவர்கள் உங்களைப் பற்றிய தகவல்களைக் காண இயலும், அதன்மூலம் நீங்கள் பலதரப்பட்ட வல்லுநர்களிடமிருந்து ஒன்றிணைந்தப் பராமரிப்பைப் பெறமுடியும்.

நீங்கள் உங்களது பொது மருத்துவர் சிகிச்சையகத்திற்கு செல்லும்போது, மருத்துவமனைக்குச் செல்லும்போது அல்லது உங்கள் சமூகத்திலோ, வீட்டிலோ நீங்கள் உதவியை நாடும்போது, உங்கள் பொது மருத்துவர், மருத்துவமனையில் உள்ள மருத்துவர்கள், நகர்ப்புற செவிலி அல்லது சமூகப் பணியாளருக்கு உங்களைப் பற்றிய சரியானத் தகவல் உரிய நேரத்தில் கிடைப்பதை இது உறுதிசெய்கிறது.

## நன்மைகள்

தகவலைப் பகிர்ந்து கொள்வது பற்றி நீங்கள் உங்களது சுகாதார மற்றும் பராமரிப்பு வல்லுநரிடம் பேசலாம், அவ்வாறு பகிர்ந்து கொள்ளும் தகவல்களால் நேரக்கூடிய சில நன்மைகள் பின்வருமாறு:

• உங்களைப் பற்றிய தகவல்களையும் மருத்துவப் பின்னணியையும் நீங்கள் ஒருமுறை கூறினால் மட்டும் போதுமானது.

• தேவையற்ற நியமனச் சந்திப்புகள் மற்றும் பரிசோதனைகளை நீங்கள் தவிர்க்கலாம்.

• உங்கள் பராமரிப்பு குறித்த தீர்மானங்களில் நீங்கள் அதிகம் ஈடுபடலாம்.

# உங்கள் பராமரிப்புக்கு ஆதரவளித்தல்

## என்னைப் பற்றிய தகவலை யார் யாரெல்லாம் பார்ப்பார்கள்?

• உங்கள் பராமரிப்பை நேரடியாக சம்பந்தப்பட்டிருக்கும் பொது மருத்துவர்கள், செவிலியர்கள், மற்றும் சமூகப் பணியாளர்கள் போன்ற சுகாதார மற்றும் சமூகப் பராமரிப்பு வல்லுநர்கள்.

• உங்கள் நியமனச் சந்திப்புகள் அல்லது உங்கள் சிகிச்சையை ஒருங்கிணைக்கும் உதவிப் பணியாளர்கள்

• உங்களுக்கு சிறந்த பராமரிப்பை வழங்கும் பொருட்டு, உங்கள் அனுமதியுடன் மருத்துவ மாநாடுகளில் உங்களுடைய நோய், சிகிச்சை மற்றும் பராமரிப்பு குறித்து சுகாதார மற்றும் சமூகப் பராமரிப்புக் குழுக்கள் கலந்தாலோசிப்பர்

## உங்களைப் பற்றி பகிர்ந்து கொள்ளப்படும் தகவல்களில் பின்வருபவை அடங்கும்:

• உங்கள் பராமரிப்புடன் தொடர்புடைய சுகாதாரம் மற்றும் நலவாழ்வுத் தகவல்கள்.

• NHS எண்.

• வயது.

• தொடர்பு விவரங்கள்.

• வாரிசுதாரர் குறித்த விவரங்கள்.

• மருந்துகளும் ஒவ்வாமைகளும்.

• நியமனச் சந்திப்புகள், சிகிச்சை மற்றும் பராமரிப்பு.

• இரத்தப் பரிசோதனைகள், ஆய்வகப் பரிசோதனைகள், எக்ஸ்-ரே போன்ற பரிசோதனை முடிவுகள்.

## உதவியளித்தல் மற்றும் பராமரிப்பை மேம்படுத்துதல்

நார்த் வெஸ்ட் லண்டனில் வசிக்கும் மக்களுக்கான உள்ளூர் சேவைகளைத் திட்டமிடுவதற்கும் மேம்படுத்துவதற்கும் உங்கள் தனிப்பட்ட விவரங்களை

உள்ளடக்காத சில தகவல்கள் சுகாதார மற்றும் சமூகப் பராமரிப்பு ஸ்தாபனங்களுடன் பாதுகாப்பான முறையில் பகிர்ந்து கொள்ளப்படலாம். பராமரிப்பைத் திட்டமிட மற்றும் வழங்க, இந்த அநாமதேயத் தகவல்கள் உதவக்கூடும். அளிக்கப்படும் சேவைகளின் தரம் குறித்தும் கண்காணிக்க எங்களுக்கு உதவும்.

## உங்களது விருப்பங்கள்

### உங்களுடைய தகவல்களைப் பகிர நீங்கள் சம்மதித்தால்,

• உங்களுக்கு பராமரிப்பு வழங்கிக் கொண்டிருக்கும் சுகாதார மற்றும் பராமரிப்பு வல்லுநர்களுடன் உங்களைப் பற்றிய தகவல்கள் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன.

• அனைவருக்கும் உள்ளூர் சேவைகளைத் திட்டமிட மற்றும் பராமரிப்பை மேம்படுத்த (உங்கள் தனிப்பட்ட விவரங்களை உள்ளடக்காத) தகவல்கள், சுகாதார மற்றும் சமூகப் பராமரிப்பு ஸ்தாபனங்களுடன் அநாமதேய முறையில் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன.

### என்னைப் பற்றிய தகவல்கள் பாதுகாக்கப்படுகின்றனவா?

தரவுப் பாதுகாப்புச் சட்டம் 1998 இன் கீழ் உங்களைப் பற்றிய தகவல்கள் பாதுகாக்கப்படுகின்றன.

• உங்களுக்கு நேரடி பராமரிப்பு வழங்குவதற்காக மட்டுமே சுகாதார மற்றும் சமூகப் பராமரிப்பு வல்லுநர்கள் உங்களைப் பற்றிய தகவல்களைக் காணமுடியும்.

• உங்களைப் பற்றிய தகவல்கள் தனியார் நிறுவனங்களுடன் பகிரவோ விற்கப்படவோ மாட்டாது.

• சுகாதார மற்றும் பராமரிப்பு வல்லுநர்கள் உங்களுடைய பதிவேடுகளைப் பாதுகாப்பாக வைத்திருப்பர்.

**உங்கள் தகவல்களை நீங்கள் பகிர்ந்து கொள்ள விரும்பவில்லை என்றால், உங்களுக்கு பராமரிப்பை வழங்கும் சுகாதார அல்லது பராமரிப்பு ஸ்தாபனத்திடம் உங்கள் விருப்பத்தைத் தெரியப்படுத்துங்கள்.**

## கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய விஷயங்கள்

நோயாளிகள் தங்களது பதிவேடுகளைப் பகிர்வதற்கும் கட்டுப்பாடான முறையில் அணுகுவதற்கும் வசதியை உண்டாக்கித் தருவதே எமது நோக்கமாகும். உங்கள் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளும்போது நீங்கள் கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டிய சில விஷயங்கள் பின்வருமாறு:

- உங்கள் பதிவேடுகள் அனைத்தையும் பகிரவேண்டிய அவசியமில்லை; யார் எதைப் பார்க்க வேண்டுமென்பதை நீங்கள் உங்களுடைய கட்டுப்பாட்டிற்குள் வைக்கலாம்.

- உங்கள் பதிவேடுகளை அணுகுவதற்கு நண்பர்கள் அல்லது குடும்பத்தினரை நீங்கள் அனுமதித்திருந்தால், அவர்கள் எந்தெந்த தகவல்களைப் பார்க்கிறார்கள் என்பதையும் நீங்கள் உங்களுடைய கட்டுப்பாட்டிற்குள் வைக்கலாம்.

- உங்கள் பதிவேடுகளில் நீங்கள் ஏதேனும் பிழையைக் கண்டறிந்தால், உடனடியாக உங்களுடைய பராமரிப்பு வல்லுநரைத் தொடர்பு கொள்ளவும்

## இதுகுறித்து மேலும் அறிய விரும்புகிறீர்களா?

உங்களுக்கு மேலும் தகவல் தேவைப்பட்டால்:

- உங்களுக்கு பராமரிப்பை வழங்கும் சுகாதார மற்றும் பராமரிப்பு வல்லுநரிடம் பேசுங்கள்.

- www.integration.healthiernorthwestlondon.nhs.uk என்ற இணையப் பக்கத்தைப் பார்வையிடுங்கள்.